


இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி இராமேஸ்வரத்தில் வார்டு எண் 18ல் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் அருகில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து புதிதாக கட்டப்பட்ட நியாய விலை கட்டிடத்தினை திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் ஈ.நாசர் கான், பிச்சை என்ற தக்ஷிணாமூர்த்தி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



நாகர்கோவில் மாநகராட்சி, 29 வது வார்டு செட்டி தெருவில் கனமழையினால் தண்ணீர் தேங்கி இருக்கும் நிலையில் மாநகராட்சி சார்பில் மோட்டார் மூலம் மழைநீரை வெளியேற்றும் பணியினை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் பார்வையிட்டு தண்ணீரை விரைந்து வெளியேற்றிட தேவையான நடவடிக்கை எடுக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். உடன் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் ரகுராமன், உதவி பொறியாளர் பழனியம்மாள், மண்டல தலைவர் கு.அகஸ்டினா கோகிலவாணி, மாமன்ற உறுப்பினர் மீனா தேவ், மாநகராட்சி பணியாளர்கள் அனந்த பத்மநாபன், சிவகுமார், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் சதாசிவன் உட்பட மாநகராட்சி அதிகாரிகள் இருந்தனர்.

### நவம்பர் 1 அன்று – காரைக்குடியில்

# கலைஞர் தமிழ்ச் சங்க 28வது ஆண்டு விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஏற்பாடு!

சிவகங்கை, அக்.26-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் நிறுவனராக கொண்ட கலைஞர் தமிழ்ச்சங்கம் செயல் பட்டு வருகிறது. கடந்த 28 ஆண்டுகளுக்கு முன்பாக கலைஞர் தமிழ் சங்கத்தை நவம்பர் மாதத்தில் தமிழக முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.

அன்று முதல் கலைஞர் தமிழ்ச் சங்கம் 28 ஆண்டுகளாக கலைஞரின் புகழ் பாடி வருகிறது .அதனை தொடர்ந்து வருகிற நவம்பர் 1,ம் தேதி சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் காரைக்குடி கவியரசர் கண்ணதாசன் மணி மண்டபத்தில் கலைஞர் தமிழ் சங்கத்தின் 28வது ஆண்டு விழாவினை முன்னிட்டு



முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தொழிலதிபர் பி.எல்.படிக்காசு முன்னிலையில் கருத்தரங்கம் துவங்குகிறது. காரைக்குடி மாநகர மேயர் எஸ்.முத்துதுரை வரவேற்பு உரை ஆற்றுகிறார்.

கலைஞர் தமிழ்ச்சங்க நிறுவனர் மூன்னாள் அமைச்சர் மு.தென்னவன் விழா துவக்க உரை ஆற்றுகிறார். எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, முன்னாள் எம்.எல்.ஏ. சுப.துரைராசு, மாநகர துணை மேயர் மாநகர செயலாளர் நா.குணசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

தொடர்ந்து நடைபெறும் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் கழக கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை கௌதமன் தென்புலத்தில் பூத்த நெருப்பு, என்ற தலைப்பிலும், கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ண மூர்த்தி தெற்கில் உதித்த சூரியன், என்ற தலைப்பிலும், திராவிட கழக தலைமை சொற்பொழிவாளர் ஆரூர் நர்மதா தென் திசை தென்றல் என்ற தலைப்பிலும் கலைஞர் புகழ்பாடி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

அதை தொடர்ந்து கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ. லியோனி மறக்க முடியுமா என்ற தலைப்பில் கலைஞர் பற்றி சிறப்புரை ஆற்றுகிறார். கலைஞர் தமிழ்ச்சங்க பொருளாளர் பொறியாளர் தி. செந்தில் குமார் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கலைஞர் தமிழ்ச் சங்க நிறுவனர் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் கலைஞர் தமிழ்ச் சங்க நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

### முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து

# தென்காசி தெற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன் ஆலோசனை!

தென்காசி, அக்.26-

தென்காசி மாவட்டத்திற்கு வருகிற 29.10.2025 அன்று திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் வருகை தர உள்ளதை முன்னிட்டு சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பாக தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம் தலைமையில் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் கலை கதிரவன் (தென்காசி) குணசேகரன் (கடையநல்லூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் கென்னடி வரவேற்புரையாற்றினார்.தலைமை செயற்குழு உறுப்பினர் ஆறுமுகச்சாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழக தளபதியார் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வருகிற 29.10. 2025 வருகை தர உள்ளதை முன்னிட்டு முன்னேற்பாடுகள் மற்றும் சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தென்காசி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று பல்வேறு ஆலோசனை வழங்கி வருகிற 29 ஆம் தேதி அன்று கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்றும் தொடர்ந்து 29 ஆம் தேதி தென்காசியில் மங்கம்மா சாலை சந்திக்கும் இடத்தில் பெட்ரோல் பங்க் அருகில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்தில் நடைபெற உள்ள அரசு நிகழ்வில் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை “எல்லாரும் எல்லாம்” என்ற அடிப்படையில் வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.இதில் கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும், திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு கொடுக்கப்பட வேண்டும் என்றார்.

நிகழ்வில் மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல் காதர், மாவட்ட துணை செயலாளர் கனிமொழி, மாவட்ட பொருளாளர் ஷெரிப், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை, முத்துப்பாண்டி,சேசு ராஜன், ஷேக் தாவுது, பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், இராஜேஸ்வரன்,தமிழ்ச்செல்வி, சாமித்துரை,ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், திவான் ஒலி,ரவிசங்கர், சுரேஷ், ரமேஷ்,சீனித்துரை, மணிகண்டன், ஜெயா, அன்பழகன்,சேக் முகமது,நகரச் செயலாளர்கள் சாதிர், கணேசன், அப்பாஸ் பீரப்பா, பேரூர் செயலாளர்கள் சுடலை, குட்டி, முத்தையா, பண்டாரம்,கோபால்,

ராஜராஜன், தங்கப்பா,வெள்ளத்துரை, சிதம்பரம், முத்து,தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா, கடையநல்லூர் நகர மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ண ராஜா, முருகன், அழகு தமிழ் சங்கர், கோமதிநாயகம், இஞ்சி இஸ்மாயில், இசக்கி பாண்டியன்,வளனரசு,பரமசிவன் முத்து ராமலிங்கம்,துணை அமைப்பாளர்கள் ஐவேந்திரன் தினேஷ், கரிசல் வேலுச்சாமி,கருப்பணன்,வழக்கறிஞர் வேலுச்சாமி,

ராமராஜ், ராஜேந்திரன், தங்கப்பாண்டியன்,சண்முகநாதன், ஜீவானந்தம், குற்றாலம் சுரேஷ் உட்பட கழக நிர்வாகிகள் கழக தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் வழியில்

# மொழி-சுதந்திரப் போராட்ட வீரர்களை கௌரவப்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!



சிவகங்கை, அக். 26-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் சிவகங்கையை தலைநகராக கொண்டு ஆட்சிபரிந்தவர்கள் மருது சகோதரர்கள். மாமன்னர் மருது பாண்டியர்கள் 224 வது குருபூஜையினை முன்னிட்டு தமிழக முதல்வர் தளபதி அவர்கள் ஆணையின்படி மருதிருவர் சிலைகளுக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் தலைமையில் அமைச்சர்கள் ஐ. பெரியசாமி, ஆர் .எஸ். ராஜ கண்ணப்பன், பி.டி. ஆர். பழனிவேல் தியாகராஜன், சிவ.வி. மெய்யநாதன் டி.ஆர். பி. ராஜா திருமதி தமிழரசி ரவிக்குமார். எம். எல். ஏ ஆகியோர் மருதிருவர் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனை தொடர்ந்து கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

சிவகங்கையில் ஆட்சி புரிந்த மாமன்னர் மருது பாண்டியர்கள் 224 வது குருபூஜையில் முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்கள் அறிவுறுத்தலின்படி நான் அமைச்சர் கள் ஐ பெரியசாமி, ஆர். எஸ் .ராஜ கண்ணப்பன், பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், டி.ஆர். பி.ராஜா, சிவ.வி. மெய்யநாதன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம். நாட்டில் தமிழ் மொழிக்காக சுதந்திர த்திற்காக பாடுபட்ட வீரர்களின் தியாகங்களை போற்றும் வகையில் பல்வேறு பங்களிப்பு பணியினை தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது செய்தார்கள். அவர்களது புகழை அனைவரும் அறியும் வகையில் தொடர்ந்து கழக தலைவர் முதல் வர் தளபதி அவர்கள் செய்து வருகிறார்கள். இந்த விழா அரசு விழாவாக நடைபெற்று வருவது அவர்களை கௌரவிப்பதாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சுதந்திர போராட்டத்திற்காக பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிர் துறந்தார்கள். அதில் மாமன்னர் மருதுபாண்டியர்கள் குறிப்பிடத்தக்க வர்கள். ஏராளமானவர்கள் உயிர் மற்றும் பொருள் தியாகத்தை செய்தார்கள். அவர்கள் பெற்று தந்த சுதந்திர காற்றை நாம் இன்று சுவாசித்துக் கொண்டிருக்கின்றோம். அனுபவித்து வருகின்றோம். இத்தகைய சுதந்திர போராட்ட வீரர்களை இந்த உலகிற்கு வெளிக்கொண்டு வரவும் எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்ளும் வகையிலும் மணிமண்டபங்கள், நினைவு சின்னங்கள் ,சிலைகள் அமைக்கப்பட்டு வருகிறது . தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த போது இத்தகைய அரிய செயல்களை செய்தார். அவரது வழியில் தமிழக முதல் வர் தளபதி அவர்கள் இதை செயல்படுத்தி வருகிறார் .கழக அரசு அமையும் போதெல்லாம் இத்தகைய மொழி, நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்களை கௌரவ படுத்தி முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. கடந்த நான்கரை ஆண்டுகளாக திராவிட மாடல் ஆட்சியில்இத்தகைய மணிமண்டபங்கள், சிலைகள் ஏராளமாக அமைக்கப்பட்டுள்ளது திருப்பத்தூரில் மாமன்னர் மருது பாண்டியர்கள் நினைவிடம் அமைவதற்கு காரணமாக இருந்தவர் முன்னாள் அமைச்சர் செ. மாதவன்ஆவார். அவர் இங்கு நினைவிடம் அமைவதற்கு

தீவிர முயற்சி எடுத்துக் கொண்டார். அவரைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா. கிருட்டிணன், சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு, தற்போதைய அமைச்சர் ரா ஜகண்ணப்பன் ஆகியோர் தொடர் முயற்சி மேற்கொண்டார்கள். அத்தகைய சுதந்திர போராட்டத்திற்காக உயிர் துறந்த மாமன்னர் மருது பாண்டியர்கள் உலாவிய இடத்தில் நான் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதை எனது பெரும் பாக்கியமாக கருதுகிறேன். அமைச்சராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட தற்கு மகிழ்ச்சி கொள்கிறேன்.

இதை எனக்கு பெரிய பாக்கியமாக கருதுகிறேன். இந்த வாய்ப்பினை அளித்த தலைவர் கலைஞர் முதல்வர் தளபதி ஆகியோருக்கு நான் நன்றி தெரிவித்து கொள்கிறேன். மேலும் மருது பாண்டியர்கள் போர் பயிற்சி பெற்ற சக்கரபதி கோட்டை ரூபாய் 13 கோடியில் புனரமைக்கப் பட்டு வருகிறது .இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க இடமாகும் .இதை எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்ளும் வகையில் மக்கள் வந்து பார்த்து தெரிந்து கொள்ளும் வகையில் இந்த பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் அந்த பணிகள் முடிவடை யும் .தமிழக ஆளுநர் ரவிக்கு தமிழக அரசியல் வரலாறு பற்றி ஏதும் தெரியாது.அவருக்குஎன்ன தெரியும். அவர் எதையாவது பேசிக் கொண்டிருப்பார்.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் கூறினார்.

பேட்டியின் போது அமைச்சர்கள், ஐ.பெரியசாமி, ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.டி.ஆர். பழனிவேல்தியாகராசன், சிவ. விமெய்யநாதன், டி.ஆர். பி.ராஜா, திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி. ஏன்.ரவி மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.

### நாளை (27ஆம் தேதி) காளையார் கோவிலில்

# மாமன்னர்கள் மருதுபாண்டியர் 224 வது ஆண்டு குருபூஜை!

## அரசியல் கட்சியினர் - சமூக அமைப்பினர் பங்கேற்பு!

சிவகங்கை, அக்.26-

சிவகங்கையை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவராகள் மாமன்னர் மருது பாண்டியர்கள். இவர்கள் நாட்டின் சுதந்திர த்திற்காக போராடிய பொழுது ஆங்கிலேயர்களால் 224 ஆண்டுகளுக்குமுன்பாக அக்டோபர் 24ஆம் தேதி திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டார்கள். மருது சகோதரர்கள் கடைசி ஆசை வேண்டுகோளின் படி ஆங்கிலேயரிடம் தங்களால் கட்டப்பட்ட காளையார் கோவில் சொர்ணகாளீஸ்வரர் ஆலய ராஜகோபரத்தின் முன்பாக தங்களது தலைகளை புதைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று காளையார் கோவிலில் ராஜகோபுரத்திற்கு முன்பாக மருது சகோதரர்கள் தலைகள் புதைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அத்தகைய வீரம் செறிந்த மாமன்னர் மருது பாண்டியர்கள் தியாகத்தினையும் புகழினை போற்றும் வகையில் ஆண்டுதோறும் அவர்களது நினைவிடத்தில் குரு பூஜை அனுசரிக்கப்படுகிறது.

நாளை 27ம்தேதி இந்த ஆண்டு 224வது குருபூஜை வினை முன்னிட்டு பல்வேறு அரசியல் கட்சியினர், சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்துவார்கள். பல்வேறு சமூக அமைப்புகள் சார்பில் அன்னதானம் நடைபெறும். முன்னதாக மகளிர் அணியினர் ஊர்வலமாக பால்குடம் மற்றும் முளைப்பாரி எடுத்து வருவார்கள். மருதுபாண்டியர் குருபூஜை யினை முன்னிட்டு பல்வேறு வழியில் பஸ் போக்குவரத்து மாற்றப்பட்டுள்ளது.

மாவட்ட எஸ்.பி.சிவ பிரசாத் தலைமையில் 3000க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடு படுத்தப்பட்டுள்ளார்கள். ஆங்காங்கே மாவட்டம் முழுவதும் ரோந்து பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளார்கள். பத்துக்கும் மேற்பட்ட சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் பரிசோதனைக்குபிறகு அனுமதிக்கப்படும். இருசக்கர வாகனங்களில் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. நாளை சிவகங்கை ,இளையான்குடி, திருப்புவனம், மானாமதுரை, காளையார் கோவில், திருப்பத்தூர் ஆகிய ஊ,ர்களில் உள்ள பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. இதே போல் 26 ,27 மற்றும் 30ஆம் தேதிகளில் மாவட்டம் முழுவதும் உள்ள மதுபான கடைகளை மூடுமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி உத்தர விட்டுள்ளார்.




திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தென்காசி மாவட்டத்தில் 29ஆம் தேதி நடைபெற உள்ள அரசு நிகழ்வில் பங்கேற்று அரசுத்துறை சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க வருகை தர உள்ளதை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பான கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவை தலைவர் சுந்தர மகாலிங்கம் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் கலை கதிரவன்,குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வே.ஜெயபாலன் பங்கேற்று பல்வேறு ஆலோசனை வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் அப்துல் காதர், முத்துப்பாண்டி,ஆறுமுகசாமி,சேசு ராஜன்,கனிமொழி,சாமித்துரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வேம்பார் செல்லும் சாலையில் தீயணைப்பு நிலையம் அருகே இலந்தைகுளம் கிராமத்தைச் சேர்ந்த மாரியப்பன் என்பவர் சாலை விபத்தில் சிக்கிய நிலையில் அந்த வழியாக வந்த விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் விபத்தில் சிக்கிய நபரை மீட்டு மருத்துவமனை அனுப்பி வைத்து மருத்துவரிடம் வழங்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.